# நான் உனக்குப் போதித்து,
# நீ நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டுவேன். சங் 32 : 8

போதிப்பார் இல்லாமல், நடக்கவேண்டிய வழி தெரியாமல், தவித்துப்போன என் அன்பு சகோதரியே, சகோதரனே,

**வேதம் சொல்கிறது**

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை, வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் – என்பதாக.

**கர்த்தர் சொல்கிறார் – ஏசாயா 30 : 21**

நீங்கள் வலதுபுறமாய் சாயும் போதும், இடது புறமாய் சாயும் போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்கள் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் – அல்லேலுயா.

**நீங்கள் செய்யவேண்டிய காரியம் – யோசுவா 23 : 6**

மோசேயின் நியாயப்பிரமாணம் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதை, விட்டு வலது புறமாகிலும், இடது புறமாகிலும் விலகிப்போகாமலும, அதையெல்லாம், கைக்கொள்ளவும் நிர்ணயம் பண்ணுங்கள்.

**ஏனெனில் இயேசு சொன்னார் – மத்தேயு 5 : 17**

நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனத்தையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்.

**நியாயப்பிரமாணம் என்றால் என்ன – மத்தேயு 7 : 12**

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறார்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம்.

**இப்படிச்செய்யும்பொழுது கிடைக்கும் ஆசீர்வாதம் – ஏசா 54:3**

**நீ வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்.**

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இந்த மாதத்தில் கர்த்தர் உனக்குப்போதிப்பார். நீ நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டுவார். உன்மேல் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவார்.

**விசுவாசத்தோடே கீழ்க்கண்ட பாடலைப்பாடுங்கள்.**

பாதை தெரியா ஆட்டைப்போல, அலைந்தேன் உலகில்,
நல்ல மேய்ப்பனாக வந்து என்னை மீட்டீரே

**நான் உனக்குப் போதித்து,**
**நீ நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்.**